6th November 1957]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இரண்டு இரண்டணு நாணயங்களை 25 நயா பைசாக்கள் என்று எடுத்துக்கொள்ளுகிற அரசாங்க அமைச்சரவர்கள் நான்கு ஓரணு நாணயங்கள் வந்தாலும் அதே நிலைமை தானே ஏற்படும் என்று எண்ணிப் பார்த்தார்களா ? அல்லது அதைப் பற்றி தக்க முடிவு தருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கன்வர்ஷன் டேபிள் பிரகாரம் மொத்த பணத்திற்கு எவ்வளவு நயா பைசா என்று இருக்கிறது. நான்கு அணுக்களாகக் கொடுத்தாலும் " கன்வர்ஷன் டேபிள் " பிரகாரம் அப்படித் தான் ஆகும். எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பதற்கு நான் ஒரு உதாரணம் சொல்லி விளக்க விரும்புகிறேன். 100 மூன்றணு டிக்கட்களுக்கு அணுக் கணக்குப்படி ரூ. 18–12–0 ஆகிறது. நயா பைசா கணக்குப்படி ரூ. 19 ஆகிறது. இதில் குறைவு ஏற்படுகிறபோது கண்டக்டர்கள் பேரிலே புகார் வருகிறது. ஏதோ இதையெல்லாம் ஒறுவாறு அவர்களிடம் பேசி, தீர்த்து வைத்திருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்னையை இப்பொழுது இப்படியே விட்டுவிடும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Pavement dwellers in the Harbour area

* 100 *Q.*—SRI S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the scheme for the improvement of six slumps and for housing pavement dwellers living in the harbour area submitted by the Corporation of Madras will be sanctioned and implemented in 1957–58 itself?

THE HON. SRI R. VENKATARAMAN : Some of the schemes referred to have been sanctioned. Plans and estimates are awaited from the Corporation in respect of the remaining schemes. All the schemes are expected to be sanctioned and implemented in 1957–58.

SRI S. PAKKIRISWAMY PILLAI : நடைபாதை வாசிகளுக்கு எந்த இடத்திலே வீடுகள் கட்டிக்கொடுப்பதாக உத்தேசம் ? அதற்கு எவ்வளவு பணம் செலவழிப்பதாக உத்தேசம் ? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : நடைபாதை வாசிகளுக்கு ஒரு லட்சத்து ஒரு ஆயிரம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இடத்தைப் பற்றி இன்னும் முடிவு செய்யப் பட வில்லை.

SRI K. VINAYAKAM : இந்தச் சேரி அபிவிருத்தித் திட்டத்தி லே சென்னை கார்ப்ரேஷன் வட சென்னையை மாத்திரம் எடுத்துக்கொண்டு அபிவிருத்தி செய்கின்ற ஒரு அமைப்பு இப்பொழுது இருப்பதால், தெற்கு சென்னையிலே ஸிடி இம்புரூவ்மெண்டு டிரஸ்டு எந்தச் சேரியையும் எடுத்து எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யவில்லை. ஏற்கனவே இருக்கும் சேரி களை ஒன்றும் செய்யாமல் இருப்பதனுலே மொத்தமாக சென்னை பூராவும் வடக்கு தெற்கு இரண்டையும் சேர்த்து கார்ப்ரேஷனே செய்யும்படி அரசாங் கம் உத்தரவு போடுவதற்கு முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு அதிகாரிகள் சேரி அபிவிருத்தி செய்வதன் மூலமாக வேலை இன்னும் துரிதமாக நடக்கும் என்ற காரணத்திஞல் தென் சென்னை பகுதியை ஸிடி இம்புரூவ்மெண்டு டிரஸ் டிக்கும், வட சென்னையை கார்ப்பரேஷனுக்கும் கொடுத்திருக்கிறுர்கள். சேரி ஒழிப்பு திட்டத்திற்காக இந்த வருஷம் தான் மத்திய சர்க்கார் பணம் அதிகமாக கொடுப்பதாகச் சொல்லுகிறுர்கள். ஆகவே இரண்டு பேரும் இப்பொழுது வேலையை துரிதமாக செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பல இடங்களிலுள்ள சேரிகளை வேறு புதிய இடங்களுக்கு மாற்றி நல்ல திருத்தங்களைச் செய்கின்ற சர்க்கார், மழை வெள்ளத்தால் அழிந்த சேரிகளுக்கு முதல் இடம் கொடுத்து, அவைகளை முதலில் செம்மைப்படுத்துவதற்கான திட்டங்களை நிறைவேற்றுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது ஏற்பட்ட மழை வெள்ளத்தின் காரணமாக அடைந்த நஷ்டத்தை சரி பண்ணுவதற்காக கார்பரேஷன் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அவர்களையெல்லாம் அப்புறப்படுத்தி நேற்றுகூட பள்ளிக்கூடங்களில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM : சேரி ஒழிப்பு திட்டத்தை கோயம்புத்தூர் முனிசிபாலிடிக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இல்லை. இது சென்னை நகரத்திற்கு மாத்திரம்தான்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that after the assignment of the task of clearing the existing slums to the authority, the City Improvement Trust, not even one existing slum has been attended to by the Trust apart from its building activities which it is pursuing in open grounds?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not correct to say that the City Improvement Trust has not taken any slum improvement work. This year, they have schemes for the improvement of slums in South Madras. It takes time for the plans to be drawn up and the scheme to be executed. I would request the hon. Member to wait for one year—1957–58 and then come forward with complaints if necessary.

Sri K. Vinayakam rose . . .

MR. SPEAKER : இந்த கேள்வி ஹார்பர் பகுதியைப் பற்றிய கேள்வி. 'ஸவுத் மதருஸுக்கும்' அதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை என்று தோன்றுகிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMI : இரண்டு, மூன்று நாட்களாக தொடர்ந்ததுபோல் மழை பெய்வதன் காரணமாக குடிசை வாழ் மக்கள் தங்குவதற்கு இடமில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ; சர்க்கார் அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : அதுபற்றி ரூல் 40-ன் கீழ் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

SRI A. VEDARATNAM PILLAI : நடைபாதையில் குடியிருப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்ட பிறகு மறுபடியும் அவர்கள் நடைபாதையில் தங்காமல் இருப்பதற்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா ? அதற்கு என்ன ஏற்பாடுகள் என்று மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நடைபாதையில் வசிப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்த பிற்பாடு போலீஸை வைத்துக்கொண்டு மறுபடியும் நடைபாதையில் அவர்கள் தங்காமல் தடுக்கவேண்டும். அவர்களுக்கு எந்த விதமான வசதியும் செய்யாமல் இப்பொழுது அவர்களை தடுப்பது நியாயம் அல்ல. அவர்களுக்கு முதலில் வீடுகள் கட்டிகொடுத்த பிற்பாடு இதை எப்படிச் செய்யலாம் என்பது பற்றி யோசிக்கலாம் என்று நினைக்கிறேன்.

6th November 1957]

Sri V. K. RAMASWAMI MUDALIAR : May I know from the Hon. Minister the steps taken by the Government to prevent the further formation of slums?

Mr. SPEAKER : I think that is a separate question.

The Hon. Sri R. VENKATARAMAN : We have not yet taken any decision on that matter.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* THE PLIGHT OF HUT DWELLERS DURING HEAVY RAIN IN THE CITY OF MADRAS.

Mr. SPEAKER : Notice has been received from hon. Member Sri S. M. Annamalai calling attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, viz., the pitiable plight of hut dwellers in the City of Madras.

Sri S. M. ANNAMALAI : ஸ்பீகர் ஸார், சென்ற சில நாட்களாக 9-38 a.m.
சென்னை நகரத்திலே மிகவும் பலமாக மழை பெய்ததன் காரணமாக சைதாப்பேட்டை ஆற்று ஓரத்தில் இருக்கக்கூடிய குடிசைகள் அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. அதுபோலவே வியாஸர்பாடி இன்னும் சில இடங்களில்கூட பல குடிசைகள் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கின்றன. இதை நாங்கள் அங்கே நேரில் சென்று பார்த்தோம். அப்படிப் பார்க்கும்பொழுது அங்கு இருந்த மக்கள் உணவு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின் பொழுது உணவு தரப்படுகிறது என்று சொன்னது குறித்து மகிழ்ச்சி உறுகிறேன். அதுபோலவே 10 பேர்கள் தங்கக்கூடிய ஒரு இடத்தில் சுமார் 50 அல்லது 100 பேர்களை அடைத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த நிலைமையில் சமையல் செய்துகூட சாப்பிடமுடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் தவிர, சேரி ஒழிப்பு திட்டத்தின் கீழ் அப்படிப்பட்ட மக்களுக்கு உடனடியாக வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டும். வருங்காலத்தில் சைதாப்பேட்டை ஆற்று ஓரத்தில் வீடுகள் கட்டாமல், அதற்கு வேறு தகுந்த இடங்களை ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டுமென்று சென்னைமாநில அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி சில சமயங்களில் மழை பெய்தால் மக்கள் தங்க வசதி இல்லாமல் தவிப்பதை உடனடியாக கவனித்து சேரி ஒழிப்பு திட்டத்தின் கீழ் அவர்களுக்கு உடனடியாக தங்க வசதி செய்துகொடுக்கவேண்டும். மழையின் காரணமாக வீடு இழந்து கஷ்டப்படும் எல்லா மக்களுக்கும் உணவு வசதிகள் செய்துகொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேற்று நாங்கள் சென்று விசாரித்தபொழுது சைதாப்பேட்டை ஆற்றங்கரை ஓரத்தில் இருக்கக்கூடிய சலவைத் தொழிலாளர்களின் சுமார் 2,000 துணிகள் அடித்துக்கொண்டு செல்லப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த ஏழைத் தொழிலாளிகள் 2,000 துணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது அவர்களால் முடியாத காரியம். ஆகையால் சென்னை மாநில அரசியலார் சலவைத் தொழிலாளர்களுக்கு இதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.